TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8943560

1. District: ERODE
மாவட்டம்

PS: GOBICHETTIPALAYAM
காவல் நிலையம்

Year: 2018
ஆண்டு

FIR No. 410
மு.த.அ. எண்

Date: 08-07-2018
நாள்

2. Act(s)
சட்டம்

| Act(s) | Sections |
|---|---|
| INDIAN PENAL CODE, 1860 | 279 |
| INDIAN PENAL CODE, 1860 | 337 |

Sections
பிரிவுகள்

3. (a) Occurrence of Offence Day: SATURDAY
குற்ற நிகழ்வு நாள்

Date From: 07-07-2018
நாள் முதல்

Date To:
நாள் வரை

Time Period: On
நேர அளவு

Time from: 07.15 Hrs
நேரம் முதல்

Time To:
நேரம் வரை

(b) Information received at PS. Date: 08-07-2018
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்

Time: 16.00 Hrs
நேரம்

(c) General Diary Reference: Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்

Time:
நேரம்

4. Type of Information: WRITTEN
தகவலின் வகை

5. Place of Occurrence: (a) Direction and Distance from PS: NORTH-EAST & 4.0 Km
குற்ற நிகழ்விடம் (அ) காவல் நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number: BEAT IV
முறைக் காவல் எண்

(b) Address: அத்தானி TO கோபி ரோடு புதுக்கரைபுதூர் நகமரத்து வயல் அருகே
முகவரி

(c) In case, outside limit of this Police Station, then the Name of P.S:
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின் அந்நிலையில், அந்த கா.நி பெயர்

District:
மாவட்டம்

6. Complainant/Informant (a) Name: ARJUNAN
குற்றமுறையீட்டாளர் / தகவல் தந்தவர் பெயர்

(c) Date/Year of Birth: [redacted]
நாள் / பிறந்த ஆண்டு

(d) Nationality: INDIA
நாட்டினம்

(b) Father's/Husband's Name : [redacted]
தந்தை / கணவர் பெயர்

(e) Passport No.:
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue:
வழங்கப்பட்ட நாள்

Place of Issue:
வழங்கப்பட்ட இடம்

(f) Occupation: LABOURER
தொழில்

(g) Address: [redacted]
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றம் சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்

[redacted] திர டூரிஸ்டர் வேனின் ஓட்டுநர்

8. Reasons for delay in reporting by the complainant/Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியால் தாமதம்

9. Particulars of the properties stolen/Involved:
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம்

---

10. Total value of properties stolen/Involved:
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report/ Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

240-4(Type-1) 11,00,000 Cps.05-01-2017(HCL-12E)



[redacted]

12. FIR Contents :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம்

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:- இன்று 08.07.2018 ஆம் தேதி 16.00 மணிக்கு கோபிசெட்டிபாளையம் காவல்நிலைய தலைமை காவலர் 1761 ராஜேந்திரன் ஆகிய நான் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது கோபி, புதுக்காரைபுதூர், பொலவக்காளிபாளையம் ரோட்டை சேர்ந்த ராமசாமி மகன் அர்ஜுனன் வயது 47 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுக்கலான எழுத்து மூலமான புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் அர்ஜுனன்(47), த/பெ ராமசாமி, 62, பொலவக்காளிபாளையம்ரோடு, புதுக்கரைபுதூர், கோபி. பெறுநர் உயர்திரு உதவி ஆய்வாளர் காவல் நிலையம், கோபிசெட்டிபாளையம். ஐயா. நான் புதுக்கரைபுதூரில் உள்ள பொலவக்காளிபாளையம் ரோட்டில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனது மனைவி பெயர் மணி. எங்களுக்கு சரண்யா ,நித்யா என்ற இரண்டு மகள்கள் உள்ளனர். எனது மனைவியின் அக்கா சரசு வயது 55 அவர் எனது பக்கத்து வீட்டில் அவரது பெற்றோர்களுடன் வசித்து வருகிறார். சுரசுவின் கணவர் சுப்பிரமணி ஏற்கனவே இறந்துவிட்டர். சுரசு திருப்பூரில் உள்ள கரோனா பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறார். அவர் தினமும் வேனில் வேலைக்கு சென்று வருவார். இந்நிலையில் நேற்று 07.07.18 ம் தேதி காலையில் எனது நங்கையாள் சரசு கம்பெனிக்கு வேலைக்கு வேனில் சென்றார். எனது நங்கையாள் சென்ற வேன் புதுக்காரைப்புதூர் சங்கிலி கருப்பராயன் கோயில் பிரிவை தாண்டி சென்றபோது ரோட்டை விட்டு கீழே இறங்கி நகமரத்து வயல் அருகில் கவிழ்ந்து விட்டதாக காயம்பட்டவர்களை கோபி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாக தகவல் தெரிந்து நான் புறப்பட்டு விபத்து நடந்த இடத்திற்கு சென்று வேனை பார்த்துவிட்டு கோபி அரசு மருத்துவமனை சென்று காயம்பட்ட எனது நங்கையாள் சரசுவை பார்த்தேன். சரசுவிற்கு வலது காரை எலும்பில் மெக்கை காயம் ஏற்பட்டிருந்தது. என்னவென்று கேட்ட போது 07.07.08 ம் தேதி காலையில் கம்பெனி வேலைக்கு செல்ல அத்தானியில் இருந்து வந்த TN 39 B Z 6599 என்ற மகேந்திர டூரிஸ்டர் வேனில் தானும் பக்கத்து வீட்டை சேர்ந்த சுமதி புதுக்காரைபுதூரில் ஏறியதாகவும், வேனில் ஏற்கனவே கூகலூரை சேர்ந்த கௌதமி அத்தானியை சேர்ந்த உமாதேவி, மதேஸ்வரி திவாகர், தங்கராஜ் இருந்ததாகவும், மேற்படி வேனை திருப்பூரைச்சேர்ந்த வடிவேல்முருகன் என்பவர் ஓட்டி வந்ததாகவும் தானும் மற்றவர்களும் வேனில் கோபி நோக்கி சென்றுகொண்டிருந்ததாகவும், வடிவேல்முருகன் என்பவர் வேனை அத்தானி TO கோபி செல்லும் கிழமேல் ரோட்டில் நேற்று 07.07.18 ம்தேதி காலை 07.15 மணியளவில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி புதுக்கரைபுதூர் சங்கிலிகருப்பராயன் கோயில் தான்டி நகமரத்து வயல் அருகே அதிகவேகமாகவும் , அஜாக்கிரதையாகவும் , கவணக்குறைவாகவும் ஓட்டிவந்தவர் அருகே சிறிய வளைவில் வேனை வேகமாக திருப்பியபோது வேன் நிலைதடுமாறி ரோட்டின் தென்புறம் இருந்த வயலில் விழுந்து விட்டதாகவும் , இதில் தனக்கு வலது பக்க காரை எலும்பில் அடிபட்டதாகவும் , சுமதிக்கும் வாலது தோள்பட்டையில் மொக்கை காயமும் கௌதமி, உமாதேவி,மகாலட்சுமி ஆகியோர்களுக்கும் மொக்கை காயங்களும் , திவாகர் தங்கராஜ் ஆகியோர்களுக்கு காயங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றும் , வேனை ஓட்டிவந்த வடிவேல்முருகனுக்கு வலது கையில் ரத்தகாயம் ஏற்பட்டதாகவும், அந்தவழியாக வந்தவர்கள் 108 க்கு தகவல் சொல்லி



[redacted]

அதன்மூலம் சிகிச்சைக்காக காயம்பட்ட தங்களை கோபி அரசு மருத்துவமனைக்கு கொண்டுவந்து சேர்த்ததாகவும், சுமதியை அவரது உறவினர்கள் கோபி அபி எஸ் கே மருத்துவமனைக்கு அழைத்து சென்று சேர்த்தாகவும் சொன்னார். அதன்பின் டாக்டர் காயம்பட்ட சரசுவை மேல்சிகிச்சைக்காக கோவை சி எம் சி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார். நாங்கள் சரசுவை சிகிச்சைகாக கோவை ஆர்த்தோ ஒன் மருத்துவமனையில் சேர்த்தும் சிகிச்சையில் இருந்து வருகிறார். கோபி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது வந்த போலிசாரிடம் நாங்கள் கம்பெனியில் உள்ளவர்களிடம் கேட்டுவிட்டு வழக்கு தேவைப்பட்டால் காவல்நிலையம் வந்து புகார் கொடுப்பதாகவும் சொன்னோம். நான் கம்பெனி மேனேஜரிடம் கேட்டு விட்டு விபத்து சம்மந்தமாக நடவடிக்கை வேண்டி புகார் கொடுக்கிறேன். விபத்தை ஏற்படுத்திய வடிவேல் முருகன் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு sd xxx ( அர்ஜுனன்) என்று கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று இன்று 08.07.18 ம் தேதி 16.00 மணிக்கு கோபிசெட்டிபாளையம் காவல் நிலைய குற்ற எண் 410/2018 சட்டப்பிரிவு 279,337 இ.த.ச வின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின் வாக்குமூலமான புகார் மற்றும் இன்டிமேசன்களையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் -1 கோபிசெட்டிபாளையம் அவர்களுக்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக கோபிசெட்டிபாளையம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. நாராயணசாமி அவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

13. Action Taken: Since the above report reveals Commission of Offence(s) u/s as mentioned in item No.2, registered the case and Directed NARAYANASAMY M , SUB INSPECTOR OF POLICE to take up the investigation.
எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2 -ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து NARAYANASAMY M , SUB INSPECTOR OF POLICE பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது

FIR read over to the Complainant/ Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant/Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு/ தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு. அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

Rஅர்ஜுனன்

14. Signature / Thumb Impression of the Complainant/Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

HC1761

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name : RAJENDRAN
பெயர்

15. Date & Time of despatch to the court: 08-07-2018
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Rank : HC No.: 1761
நிலை எண்

[redacted]